டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் மகளிருக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பதன் காரணமாகத்தான் 1991-92–ஆம் ஆண்டில் ஒரு ஹெக்டேருக்கு 450 கிலோ அரிசி உற்பத்தி, 1992-93–ல் ஆயிரம் கிலோ அரிசியாகவும், 1993-94–ல் அந்த உற்பத்தி 1500 கிலோவாகவும் அதிகரித்து உள்ளது. வறட்சியான இராமநாதபுரம் மாவட்டத்தில் உற்பத்தியை அதிகரிக்கும் பொருட்டு வேளாண்மைத் துறை மூலம் என்னென்ன திட்டங்கள் உள்ளன; இதில் தோட்டக் கலைக்கு சிறப்புத் திட்டங்கள் உள்ளனவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: பேரவைத் தலைவர் அவர்களே, வறட்சியான இராமநாதபுரம் மாவட்டத்தில் வேளாண்மை உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்ற உயரிய எண்ணத்தோடு பல்வேறு திட்டங்களை தமிழக அரசு இன்றைக்கு செயல்படுத்தி வருகிறது. அந்தத் திட்டங்களின் வாயிலாகத்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற அளவு அரிசி உற்பத்தி அந்த மாவட்டத்தில் கூடியிருக்கிறது. பல்வேறு திட்டங்கள் அந்த மாவட்டத்தில் செயல்படுத்தி வந்தாலும், இந்த ஆண்டு முதல் பழைய இராமநாதபுரம் என்று சொல்லக்கூடிய இராமநாதபுரம் மாவட்டம், காமராசர் மாவட்டம் மற்றும் பசும்பொன் மாவட்டம் என்று சொல்லக் கூடிய இந்த மூன்று மாவட்டங்களையும் உள் அடக்கி நீர்ப்பிடி முகடு என்ற திட்டத்தின்கீழ் 28 கோடி ரூபாய்க்கு ஒரு திட்டத்தை இந்த ஆண்டு துவக்குவதற்கு தமிழகத்தினுடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணை வழங்கியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 250. திரு.டி. சுதர்சனம், மாண்புமிகு தொழில்துறை அமைச்சர்.

250—

கரும்பு உற்பத்தியாளர்களுக்கு அரசு அளிக்கும் சலுகைகளின் விவரம்.

*10654—திரு.டி. சுதர்சனம்:

மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மத்திய அரசு அறிவித்த செஸ் வரி, எக்சைஸ் வரி ரத்து சலுகை மூலம் கிடைக்கும் உபரித் தொகையினை கரும்பு உற்பத்தியாளர்களுக்குத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) சர்க்கரைக்கு மத்திய அரசு செஸ்வரி, எக்ஸைஸ் வரி ரத்து போன்ற சலுகை ஏதும் அறிவிக்கவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

முற்பகல் 10-30

திரு. டி. சுதர்சனம்: பேரவைத் தலைவர் அவர்களே, கரும்பு விவசாயிகள் தமிழகத்திலே இன்றைக்கு மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு விலை ஏற்றிக் கொடுப்பதன் மூலமாக இந்த அரசு விவசாயிகளுக்கு நல்ல காரியங்களைச் செய்ய முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: பேரவைத் தலைவர் அவர்களே. இந்த ஆண்டு தமிழக அரசைப் பொறுத்தவரை வரலாற்றில் இல்லாத அளவுக்கு 8.5 ரெக்கவரி கரும்புக்கு ரூ.450 ம், அதற்கு மேலே இருக்கின்ற கரும்புக்கு சென்ற ஆண்டு ரெக்கவரியை வைத்து 555 வரை இந்த அரசு ஏற்கெனவே இல்லாத அளவுக்கு மாற்றிக் கொடுத்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல் நம்முடைய உறுப்பினர் கேட்டிருக்கின்ற கேள்விக்கும் இதற்கும் தொடர்பு இல்லை. அவர் கேட்டு இருப்பது சர்க்கரைக்கு மத்திய அரசு செஸ்வரி எக்ஸைஸ் வரி ரத்து செய்திருக்கிறார்களா என்று கேட்டிருக்கிறார்கள். அப்படி ஏதும் இல்லை என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 251, திரு.கு. சீனிவாசன், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

251—

மன்னார்குடியில் நிலக்கரி உள்ளதா என்று ஆய்வு செய்தல்.

*35024—**திரு. கு. சீனிவாசன்:**

மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மன்னார்குடி பகுதியில் நிலக்கரி உள்ளதா என்று ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?